இலங்கை அரசு ... ட்டத்தை
பிரேரணையாக 'எப ... வண்டும்!

Registered as a Newspaper in Sri Lanka

... அமிர்' பேட்டி

... பூட்டான் தலைநகர் திம்பு ... தமிழ் அமைப்புகளும் முழு ... ஒன்றுபட்டு இருந்ததால் அப ... ாக அமைந்தது'' என்று திம் ... ன திரும்பிய தமிழர் விடுத ... லிங்கம் பி ரி ஐ நிருபருக்க ... டில் தமிழ் குழுக்கள் ய வும் ... ருபாடு இன்றிச் செயற்பட் ... சொன்னர் தமிழர் விடுத ... ழுக்களும் கலந்து கொள்ள ... முக்கியமானவை'' என்று ... யவர்த்தன தமிழர்களுக்கு ... ார்

—6ம் பக்கம் பார்க்க

# ஈழமுர...

முரசு 2 18-7-1985 வியாழக்கிழமை (ஆடி 3 ஷவ்வால் 29) முழ...

★ அமைச்சரவை முன் எச். டபிள்யூ. ஜெயவர்த்தன விளக்கம்:

# சுயாட்சி வழங்க அரசு தயார்!

## தனிநாட்டு கோரிக்கை ஏற்பதற்கு முடியாதது!

### ஒரு சமூகத்துக்கு விசேஷ சலுகை கிடையாது மற்றையவர்களுக்காகப் பேசவும் முடியாது

(கொழும்பு)

"சுயநிர்ணயத்துக்கான தமிழரின் உரிமையை அங்கீகரிப்பதன் மூலமும், இதனை ஒரு பூரண உரிமையாக்குவதன் மூலமுமே ஒரு அரசியல் தீர்வைக் காணலாம் என்ற தமிழ்க் குழுக்களின் பிரேரணை எந்த விதமாக அழைக்கப்பட்டாலும், அது ஒரு தனிநாட்டுக் கோரிக்கை என்ற முறையில் முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது" என்று பூட்டான் சென்ற இலங்கைக் குழுவின் தலைவரான எச் டபிள்யூ. ஜெயவர்த்தன கியூ. ஸி, நேற்றுத் தெரிவித்தார்.

நேற்றைய மந்திரி சபைக் கூட்டத்தில் தமது பேச்சுவார்த்தை பற்றி விளக்கிய அவர், "ஜனநாயகத்தின் கோட்பாடுகளுக்கு அமைய தற்போதுள்ள அரசியல் திட்டத்தின் கீழ் நியாயமான அளவு சுயாட்சி உரிமை வழங்கப்பட வேண்டும் என்ற அர்த்தத்தை இந்தக் கோரிக்கை கொண்டிருந்தால், இவ்வாறான சுயாட்சி உரிமை வழங்க அரசு தயார் என்றும், இந்த அடிப்படைக் கோரிக்கைகளைக் கொண்ட பிரேரணையை அரசாங்கம் வைத்திருக்கிறது" என்றும் தெரிவித்தார்.

சகல பிரஜைகளுக்கும் ஒரே விதமான முறையில் சுயநிர்ணய உரிமையை வழங்க வேண்டிய அவசியத்தையும் இலங்கை உணர்ந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆனால் தனிப்பட்ட ஒரு சமூகத்துக்கு எந்தவொரு விசேஷ சலுகைகளையும் அடிப்படையாகக் கொண்ட எந்த அரசியல் தீர்வும் காணப்பட முடியாதெனவும் சொன்ன ஜெயவர்த்தன கியூ ஸி. முஸ்லிம்களுக்காகவும், இந்தியத் தமிழருக்காகவும் பேச தமிழ்க் குழுக்களுக்கு உரிமையில்லை என்றும் அதனை அரசினால் அங்கீகரிக்க முடியாதெனவும் தெரிவித்தார்.

## புதிய யோசனைகளுடன் மீண்டும் சந்தித்துப் பேசுவோம்!

இம்மாதம் ஒன்பதாம் திகதி முதல் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்போது இனப்பிரச்சினைக்கான நிரந்தர பயனுள்ள தீர்வொன்றைக்காண எடுக்கப்படும் முயற்சி இலங்கையில் ஐக்கியம், இறைமை என்பவற்றை அடிப்படையாகக்கொண்டதாகவும். அரசியல் சட்ட ஒருமைப்பாட்டு அம்சத்துடன் சகல சமூகங்களினாலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக அமைய வேண்டும் எனவும் சட்டத்தரணி ஜெயவர்த்தன கியூ ஸி அமைச்சரவை முன் நேற்று தெரிவித்தார்.

நடுத்தர நிலையில் இருந்தும் அடிமட்ட நிலையில் இருந்தும் பல்வேறு துறைகளில் அதிகார பரவலாக்கல் சம்பந்தமான அரசாங்கத்தின் பிரேரணைகள் பற்றி திரு ஜெயவர்த்தன விளக்கிக் கூறுகையில், இவ்வாறான பிரேரணைகள் அரசியல் சட்டத்தில் ஒருமைப்பாட்டு அம்சத்துடன் அமைந்த வகையில் அமுல் நடத்தப்படும் அதேவேளையில் நாட்டின் ஐக்கியம் பாதுகாக்கப்பட வேண்டுவதோடு மத்திய அரசாங்கத்திற்கென குறிப்பிட்ட அதிகாரங்களும் ஒதுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

—6-ஆம் பக்கம் பார்க்க

### பத்திரிகைத் தணிக்கை நீக்கம்

கடந்த பல மாதங்களாக அமுலிலிருந்து வந்த பத்திரிகைத் தணிக்கை நேற்று முதல் நீக்கப்பட்டது.

## சென்னையில் மூன்று தினங்கள் தமிழ்ப் பிரதிநிதிகள் பேசுவர்

(சென்னை)

பூட்டான் மாநாட்டில் கலந்து கொண்ட ஈழத்தமிழர்களின் ஒற்றுமையின உறுதி தொடர்பான பேச்சுவார்த்தைகள் மூன்று தினங்களுக்கு நடத்தப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நான்கு அமைப்புக்களின் கூட்டணியான ஈழத் தேசிய விடுதலை முன்னணியின் பிரமுகர் ஒருவர் இதனைத் தெரிவித்ததாக சென்னை வானொலி தனது செய்தி அறிக்கையில் நேற்றுக் காலை தெரிவித்தது.

தீவிரவாத இயக்க பிரதிநிதிகள் நேற்று முன் தினம் சென்னை திரும்பிய பின்னர் இத்தகவலைத் தெரிவித்ததாக குறிப்பிடப்பட்டது.

### முஸ்லிம் வர்த்தகர் வெட்டிக் கொலை

மட்டுநகரின் பிரபல முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் கண்டதுண்டமாக நேற்று முன்தினம் இரவு வெட்டிக்கொலை செய்யப்பட்டார். சடலம் இரத்த வெள்ளத்தில் கிடக்கக் காணப்பட்டது பொலிஸார் விசாரணை நடத்திவருகின்றனர்.

## பலாலி 25; பூஸா 20 நாளை முதல் விடுதலை

பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இருபத்தைந்து இளைஞர்கள் நாளை வெள்ளிக்கிழமை விடுதலை செய்யப்படுவார்கள்.

இவர்கள் தத்தமது வீடுகளுக்குச் செல்லக்கூடியதாக போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்படுமென அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

பூஸா முகாமிலிருந்தும் 20 பேர் ஞாயிற்றுக்கிழமை விடுதலை செய்யப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களை அனுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணம் கொண்டுவர அரசாங்க அதிபர் ஒழுங்கு செய்துள்ளார்.

### தமிழகத்துக்கு நீலன் அழைப்பு

கூட்டணியின் முக்கிய பிரமுகர்களில் ஒருவரான கலாநிதி நீலன் திருச்செல்வம், கட்சித் தலைவர்களால் அவசரமாக தமிழ் நாட்டுக்கு அழைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

பொலிஸ் விசாரணையில் கண்டுபிடிப்பு:

## வெங்காயத்துடன் மறைத்து ஜெலிக்னைட் கடத்தினர்!

ஜனாதிபதியைக் கொலைசெய்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சியின்போது கைப்பற்றப்பட்ட ஜெலிக்னைட் யாழ்ப்பாணத்திலிருந்தே கடத்திவரப்பட்டதாக இதுவரை நடைபெற்ற விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு ஏற்றிச்செல்லப்பட்ட சின்னவெங்காயத்துக்குள் மறைத்து வைக்கப்பட்டு

– 6ஆம் பக்கம் பார்க்க

## மன்னாரில் நேற்று ஹர்த்தால் அமைதியாக அனுஷ்டிப்பு!

(மன்னார்)

பூட்டான் மகாநாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக மன்னாரின் பல பகுதிகளிலும் அமைதியானமுறையில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதாக மன்னாரின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து செய்திகள் கிடைத்துள்ளன.

மன்னார் நகரைத் தவிர்ந்த மற்றைய இடங்களில் கடைகள், பாடசாலைகள், தொழிற்சாலைகள், அலுவலகங்கள் மூடப்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது போக்குவரத்துச் சேவைகளும் ஸ்தம்பிதமடைந்திருந்தன.

– 6 ஆம் பக்கம் பார்க்க

## 1980 வேலை நிறுத்தம் நாளை நினைவு கூரும் மறியல்

1980ஆம் ஆண்டில் இடம்பெற்ற வேலை நிறுத்தத்தின் 5வது ஆண்டை நினைவு கூரும் முகமாக நாளை வட பிரதேச தொழிற் சங்கங்களின் கூட்டுக்குழு யாழ்ப்பாணத்தில் மறியல் போராட்டமொன்றை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது. இக் கூட்டுக் குழுவிலுள்ள பதின்மூன்று தொழிற் சங்கங்களும் இம் மறியலில் ஈடுபடவுள்ளன.

நண்பகல் உணவு இடைவேளை நேரத்தின்போது 12 00 மணிக்கும் 1 மணிக்கும்

– 6ஆம் பக்கம் பார்க்க

ஈழமுரசு

## வரி விளம்பரம்

### காணவில்லை

30 ஸ்ரீ 1019 இலக்க வாகன - லைசென்ஸ், றூட் பெர்மிட், வரிப்பத்திரம், இன்சூரன்ஸ், அடையாள அட்டை ஆகியவற்றுடன் தவறிவிட்டது. தயவு செய்து தகவல் தரவும்:- "பிலிப்ஸ் ட்ராவல்ஸ்" "துளசி பவனம்" 3ம் கட்டை, கட்டப்பிராய்.

கிளிநொச்சி விரேசன் வீதியைச் சேர்ந்த வடிவேலு நடராசாவின் அடையாள அட்டை கிளிநொச்சிக்கும் இராமநாதபுரத்திற்கும் இடையில் காணமல் போய்விட்டது. கண்டெடுத்தவர்கள் சரவணை கூல்பார், பஸ் நிலையம், கிளிநொச்சியில் ஒப்படைத்து சன்மானத்தைப் பெற்றுக் கொள்ளவும்.

### தவறிவிட்டது

எனது தேசிய அடையாள அட்டையும், நில அளவைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டா அடையாள அட்டையும் சவகச்சேரிப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுப்போர், தயவுசெய்து கீழ்க் குறிப்பிடும் முகவரியில் சேர்ப்பிக்கவும். பண்டாரி மகேந்திரன், நுணுவில் மேற்கு, சாவகச்சேரி.

### விற்பனைக்கு

"றெயிலர்" (Trailer) ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும் த. பெ. 77, மில்க்வைற் யாழ்ப்பாணம்.

நல்ல நிலையிலுள்ள பாவித்த தேக்குமர செற்றி ஒன்று விற்பனைக்கு உண்டு. 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## சமய வாழ்வு வாழ்ந்தால் துன்பங்கள் அணுகமாட்டா

(உடுப்பிட்டி)

"இன்றைய காலகட்டத்தில் சமய விழாக்கள் எமது மக்களுக்கு மிகவும் அவசியமானதாக உள்ளன. கிராமங்களில் உள்ள ஆலயங்கள் தோறும் சமய விழாக்களை நடத்தி சமயப்பெரியார்களை அழைப்பதுடன் சமயச் சொற்பொழிவுகள், கருத்தரங்குகள், கதாப்பிரசங்கங்களை நடாத்த வேண்டியது சமுதாய நலன் விரும்பிகள் முன்னுள்ள பாரிய பொறுப்பாகும்!"

இவ்வாறு கரவெட்டி தச்சன் தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவத்தின் தீர்த்தத் திருவிழாவின் போது உரையாற்றிய அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் திரு. ஜெயராஜ் குறிப்பிட்டார்.

இவ்வுற்சவத்தின் பத்து நாட்களும் உரை நிகழ்த்திய அவர், மேலும் பேசுகையில், "இன்றைய நவீன தொழில்நுட்ப விஞ்ஞான உலகில் போட்டி பொறாமைகளில் இருந்து மீள்வதற்கு ஆன்மீக வாழ்க்கை நெறி மனிதனுக்கு அவசியமாகின்றது. சமய நெறியில் வாழும் போதுதான் மனிதன் தனது வாழ்க்கையின் இலட்சியத்தை அடைந்து இன்புற முடியும். உண்மையான இறைபக்தியும் உறுதியான இறை நம்பிக்கையும், ஆன்ம சுத்தியுமே மனிதனை வாழ்வில் ஈடேற்றக் கூடியவை.

சமய வாழ்வு வாழும் மனிதனை எவ்விதமான துன்பங்களும் தொல்லைகளும் எவ்வுருவிலும் அணுகமாட்டா. மக்கள் மத்தியில் சமய வாழ்க்கை முறை பற்றிய விளக்கங்கள் அணுகப்படவேண்டும்; அவை பற்றி விளக்கப்படவேண்டும். அப்போதுதான் சமய வாழ்க்கை முறையின் உன்னத நிலைபற்றி அவர்கள் உணர்ந்து தாமும் சமய நெறியில் ஈடுபடுவர்.

இன்று உலகமாந்தர் அனுபவித்து வரும் பலவித இன்னல்களுக்கும் காரணம் சமயநெறி தவறி வாழ்வதுவேயாம் என்று அவர் சொன்னார்.






✱ திருநெல்வேலி பரராஜசிங்கம் கோமதி தம்பதிகளின் மகன் ராஜ்குமார் இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ சுழிபுரம் மேற்கு சதாசிவம் பசுபதி தம்பதிகளின் மகன் வைத்தியநாதன் இன்று தனது ஏழாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✱ சாவகச்சேரி கல்வயல் சிவா ஜோதி தம்பதிகளின் மகள் சோபனா இன்று தனது இரண்டாவது பிறந்தநாளை கொண்டாடுகிறார்.

✱ பண்டியன்தாழ்வு சின்னத்துரை நல்லம்மா தம்பதிகளின் மகன் ரஜனிகாந் இன்று தனது பத்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✱ அரியாலை கயேந்திரன் இராஜலட்சுமி தம்பதிகளின் மகன் வேல்ரூபன் இன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

## பிறந்தநாள் வாழ்த்து

வட்டு கிழக்கு பிளவத்தையைச் சேர்ந்த ரவிச்சந்திரன் பிறேமா தம்பதிகளின் செல்வப் புதல்வன் சஜீவ் இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் குதூகலமாக கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், அத்தைமார், மாமாமார் மற்றும் உறவினர் ஆகியோர் வாழ்த்துகிறார்கள்.

பச்சிலைப்பள்ளி மாணவர் ஒன்றியத்தின் ஆதரவில் பாதிக்கப்பட்ட மக்களின் நிவாரண நிதிக்காக யாழ். பல்கலைக்கழக மாணவர் அளிக்கும்

## "எங்கள் மண்ணும் இந்த நாட்களும்"

(கவிதா நிகழ்வு)

## "மண் சுமந்த மேனியர்"

(நாடகம்)


இடம்: கிளி. பளை மகா வித்தியாலயம்
காலம்: 20. 07. 85 சனி
காலை 9.00 மணி.

## மரண நன்றி நவிலல்

பேராதனைப் பல்கலைக்கழக விஞ்ஞானபீட இறுதியாண்டு மாணவர்கள் மகேந்திரன் ஜெயரூபன், சேதுநாயகம் கணேசராஜா ஆகியோர் 30-6-85 அன்று திஸ்ஸமகாராமவில் அகால மரணமடைந்தனர். இவர்களது உடல்களைக் கண்டுபிடிப்பதில் இரவு பகலாக கண்துஞ்சாது ஈடுபட்ட சக மாணவர்கட்கு எமது இதயபூர்வமான நன்றியறிதலை முதற்கண் தெரிவிக்கின்றோம். அத்துடன் சகலவிதத்திலும் ஒத்துழைத்து உதவிய அவ்வூர் பொதுமக்கள், துறைமுகப்பகுதி பொறியியலாளர், திஸ்ஸமகாராம பொலிஸார், மரணவிசாரணை அதிகாரி, வைத்திய அதிகாரி, பௌத்த குருமார், உப்புக் கூட்டுத்தாபன அதிகாரிகள், ஊழியர்கள், பல்கலைக்கழக நிர்வாகத்தினர், றேமன்ட்ஸ் அந்திமகால சேவையினர், இலங்கை ரயில்வே பகுதியினர் ஆகியோருக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். பூதவுடல்களை யாழ். அனுப்புவதற்கான முழு ஏற்பாடுகளையும் செய்து, செலவுகளையும் பொறுப்பேற்ற அனைத்து பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கட்கும், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோர்க்கும் எமது நன்றியைத் தெரிவிக்கிறோம்.

நண்பர்கள், குடும்பத்தினர்

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
J. அந்தோனிப்பிள்ளை
(உரிமையாளர் : "அன்ரோ" லிக்கர் சொப்)

தங்கள் ஆன்மா சாந்தியடைய நன்றியுடன் பிரார்த்திக்கும்

சகோதரர்கள்,
மைத்துனிகள்,
பெருமக்கள்,

40, மாட்டின் லேன்,
யாழ்ப்பாணம்.

## SCIENCE ACADEMY

50, செட்டித்தெரு லேன், நல்லூர்.

1ம் வகுப்புத் தொடக்கம் புலமைப் பரிசில் பெறும் 5ம் வகுப்புவரை திரு. ஆறுமுக வடிவேல் உட்பட திறமையான ஆசிரியர்களால் தமிழ், கணிதம், ஆங்கிலம் கற்பிக்கப்படும்.

6 தொடக்கம் O/L வரை
சகல பாடங்களும் ஆரம்பமாகின்றன

### A/L 87

பௌதிகம் — திரு. மணியம்
இரசாயனம் — திரு. சத்தீஸ் - செல்வா
விலங்கியல் — திரு. தம்பிராஜா
தாவரவியல் — திரு. சர்வா பாலா

விபரங்களை, தினசரி பி. ப. 3 — 6.30 வரை நிர்வாகியிடம் மேற்படி கல்வி நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

A/L 87 ஆரம்பம் 14-7-85
சனி 8.30

கீழ்வகுப்புகள் ஆரம்பம் 22-7-85
திங்கள் பி. ப. 3.30

## தரமான தங்க நகைகளை

உங்கள் விருப்பம் போல்
தெரிவு செய்ய இன்றே நாடுங்கள்

★ நித்யா ★

கோல்ட் ஹவுஸ்

NITHYA GOLD HOUSE

303, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

குறிப்பு: தரமான பழைய நகைகளை கூடிய விலைக்கு கொள்முதல் செய்யப்படும்

# ஓர் இனம் ஆக்கிரமிப்பிலிருந்து விடுபட அதன் கிராமியபண்பாட்டை அறியவேண்டும்

— துணைவேந்தர் 'வித்தி' பேச்சு

(இ. பாரதி)

"ஒரு இனம் அதன் மீது திணிக்கப்பட்ட ஆக்கிரமிப்பிலிருந்து விடுபடுதல் வேண்டும். இதற்கு அச்சமுதாயத்தின் கிராமியப் பண்பாடுகளைக் கண்டறிவது அவசியமாகும். இந்தவகையில் வடமராட்சியின் ஆலய வரலாற்றை "இத்தி மரத்தாள்" என்னும் இந்நூல் தருகிறது" என்று யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன், பேராசிரியர் அ. சண்முகதாஸ், திருமதி. மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் எழுதிய 'இத்திமரத்தாள்' நூல் வெளியீட்டு விழாவிற்குத் தலைமை வகித்து உரையாற்றுகையில் தெரிவித்தார்.

பருத்தித்துறை - தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளியம்மன் கோவில் பற்றிய வரலாற்று ஆய்வான இந்நூலின் வெளியீட்டு விழா திங்கட்கிழமை மாலை நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்றது. ஆதீனத்தலைவர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாசாரிய சுவாமிகளின் ஆசியுரையுடன் ஆரம்பமான இவ்விழாவில் பேராசிரியர் வித்தியானந்தன் தொடர்ந்து பேசுகையில் இந்நூலை எழுதிய பேராசிரியர் சண்முகதாஸ் தம்பதிகள் ஆய்வுத்துறையில் முறையான பயிற்சி பெற்றவர்களாவர் என்று கூறினர்.

பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் ஆய்வுரை நிகழ்த்துகையில், "மேலை நாடுகளில் ஒரே துறையில் தம்பதிகளாக ஈடுபடுவது வழமை. ஆனால் கீழைத்தேசங்களில் இவ்வாறாக ஒரே துறையில் ஆராய்ச்சி நடத்துவது அபூர்வம்" என்று கூறினர்.

அவர் மேலும் பேசுகையில், இத்திமர வழிபாடு ஜப்பானிய வழிபாட்டுடனும் தொடர்பு படுத்தப்பட்டு எழுதப்பட்டுள்ளது. ஆயினும் இத்தொடர்பு ஆழமாக ஆராயப்பட வேண்டிய விடயமாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கோவில்களின் வரலாறு இந்து கலாசார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது. இவை ஆராய்ச்சி நூல்களாக வெளிவரவில்லை. பத்திரிகைக் கட்டுரைகள் போன்று சாதாரண வரலாற்றுத் தகவல்களைத் தருபவையாகவே வெளியாகியது.

ஈழத்து இந்துமத வரலாறு பற்றி எழுதவேண்டிய அவசியம் இன்று உண்டு. இந்து மதம் தமிழர்கள் மத்தியில் மட்டுமன்றி சிங்களவர்கள் பௌத்தர்கள் மத்தியிலும் வாழ்கின்றது என்று கூறினர்.

இவ் விழாவில் கலாநிதி கைலாசநாதக் குருக்கள் உரையாற்ற இருந்த போதிலும் கடைசி நேரத்தில் அவர் வர முடியாமற் போனதால் அவரது செய்தி அங்கு வாசித்துக் காட்டப்பட்டது யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் திரு. வே. சிவராசா, வெளியீட்டுரை நிகழ்த்தினர். வித்துவான் க. சொக்கலிங்கம் (சொக்கன்) ஆய்வுரை நிகழ்த்தினர்.

குளோபல் எம். சிவராசா சிறப்புப் பிரதியை துணைவேந்தர் சு. வித்தியானந்தனிடம் இருந்து பெற்றுக் கொண்டார். விரிவுரையாளர் சிவலிங்கராசா வரவேற்புரை நிகழ்த்தினர். நூலாசிரியர்களில் ஒருவரான கலாநிதி அ. சண்முகதாஸ் நன்றி தெரிவித்து உரையாற்றினர்.

# மதிப்பிட முடியாத சக்தி மாணவரிடம் இருக்கிறது

(குருநகர்)

"மாணவர்களிடம் மதிப்பிடமுடியாத பெரும் சக்தி உள்ளடக்கப்பட்டுள்ளது. தேங்கிநிக்கும் மழை நீரை வயலுக்குப் பாய்ச்சி நற்பயன்பெறுவதுபோல மாணவர் சக்தியையும் எதிர்காலத்தை நோக்கி நன்னெறிப்படுத்தி, எதிர்காலத்தில் வரவிருக்கும் மாணவர் சமுதாயத்திற்கு நல்வழி காட்டவேண்டும்."

யாழ்-சென்: பற்றிக்ஸ் கல்லூரி இல்ல விளையாட்டுப் போட்டி பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய அருட்திரு, லூயிஸ் பொன்னையா மேற்கண்டவாறு குறிப்பிட்டார். கல்லூரி அதிபர் அருட்திரு, ஜி. ஏ. பிரான்சிஸ் யோசப் தலைமையில் விழா நடைபெற்றது.

இல்லங்களுக்கிடையில் 142 புள்ளிகளைப்பெற்ற 'பொஞ்சின்' இல்லம் முதலாம் இடம் பெற்றது.

## இன்றைய நிகழ்ச்சி

(நீர்வேலி)

யா/ அத்தியார் இந்துக் கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தின் வருடாந்த ஒன்று கூடல், தேநீர் விருந்து வைபவங்கள் இன்று 18-ம் திகதி கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ளன. இவ்வைபவத்திற்குப் பிரதம அதிதியாக யாழ். கல்வித்திணைக்கள நிர்வாக அதிகாரி திரு. இ. சுந்தரலிங்கமும், சிறப்பு விருந்தினராகக் கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரியாக திரு. ஆ. வ. தங்கராஜாவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## கச்சாயில் கொள்ளை

(சரசாலை)

கச்சாய் கிராமத்தில் திரு: மு. காசித்தம்பி என்ற ஆசிரியர் வீட்டில் பட்டப்பகலில் ஆயுதங்களைக் காட்டி மூன்று இளைஞர்கள் பெறுமதி வாய்ந்த நகைகளை அபகரித்துச் சென்றுவிட்டனராம். மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இளைஞர்களே இவ்வாறு கொள்ளையடித்தனராம்.

## அரியாலை மேற்கு மகப்பேற்று நிலையம்

(அரியாலை)

அரியாலை மேற்கு மகப்பேற்று நிலையம் யாழ். மாநகர ஆணையாளர் திரு. சீ. வி கே. சிவஞானத்தால் திறந்து வைக்கப்பட்டது. வசதி பொருந்திய இந்நிலையம் திறக்கப்பட்டதனால் இப்பகுதி மக்களின் நீண்டகாலக் குறை நிவிர்த்தி செய்யப்பட்டுள்ளது. கலாநிதி எஸ். மோகனதாஸ் தலைமையில் வைபவம் நடைபெற்றது.

இவ்விழாவில் திரு: ஈ. இராசையா, அரியாலை மகளிர் சங்கத் தலைவி திருமதி. பாலாவேல்முருகு, திரு. ஈ. முத்தையா, டாக்டர் எம். வேதாரணியம் ஆகியோர் உரையாற்றினர்கள். திரு- என். கிருஷ்ணசிங்கம் நன்றியுரை நிகழ்த்தினர்.

கிளிநொச்சி மாவட்ட

# கல்விப் பணிப்பாளரின் விளக்கக் கடிதம்

18-7-85 திகதி வெளியான 'ஈழமுரசின்' 2ம் பக்கத்தில் 'பட்டதாரி ஆசிரியர் சம்பளம் இவர்களுக்கும் கிடைக்கும்' என்ற தலைப்பில் வெளியான செய்தி விஷமத்தனமானதுமட்டுமன்றி முற்றிலும் ஆதாரமற்றதெனவும் கூறி வைப்பதுடன், இது சம்பந்தமான உண்மையான விளக்கத்தை கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் என்ற முறையில் முன்வைக்க விரும்புகிறேன்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சங்கீத, நடன ஆசிரியர்களில் சிலர் அண்ணாமலைப் பல்கலைக் கழக தராதரத்தையும் ஏனையோர் இராமநாதன் நுண்கலைக் கழக தராதரத்தையும் உடையவர். தயாரத்தின சம்பள சிபாரிசுக் குழுவின் அறிக்கையின்படி பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கான சம்பள விகிதத்தைப் பெறுகின்ற சங்கீத ஆசிரியர்களுக்கே பட்டதாரி ஆசிரியர்களுக்கான சம்பள விகிதம் கொடுப்பதற்கு சிபாரிசு இடமளிக்கின்றது. ஆனால் பெரும்பாலான சங்கீத நடன ஆசிரியர்கள் க.பொ.த. (உயர்தர) ஆசிரியர்களுக்கான சம்பள விகிதத்தைப் பெற்று வருவதன் காரணத்தினால் இவ் ஆசிரியர்களுக்கு புதிய மாற்றுச் சம்பளம் நிர்ணயிப்பதால் சிக்கல் ஏற்பட்டுள்ளது

இது பற்றி அமைச்சின் மேலான அறிவுறுத்தலை எதிர் பார்க்கின்ற காரணத்தினால் சம்பந்தப்பட்ட சங்கீத நடன ஆசிரியர்களுக்கு மாற்றுச் சம்பளம் வழங்க முடியாதிருக்கின்றது. தங்கள் பத்திரிகையில் குறிப்பிட்டது போல் கல்வி அமைச்சிடமிருந்து எனக்கு இதுபற்றி எந்தவித பணிப்புரையும் வழங்கப்படவில்லையென்றும், எனது திணைக்களத்தைச் சேர்ந்த ஊழியர்கள் இது விடயமாக எவ்வித அலட்சியமும் காட்டவில்லையென்பதைக் கூறி வைப்பதுடன் பொறுப்பற்ற முறையில் ஆதாரமற்றவற்றைக் கூறி ஆசிரியர்கள் மத்தியில் ஓர் குழப்ப நிலையை உருவாக்கி தொழிற்சங்க இலாபம் ஈட்டுவதற்கே தமிழ் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் முயலுவது போல் தோன்றுகிறது. இவ்வித ஆதாரமற்ற முயற்சிகளில் ஆசிரிய சங்கங்கள் தவிர்வது கல்வி உலகத்துக்கு ஆற்றும் ஒரு பெரும் பணியாகும்.

எம். எம். மன்சூர்
கல்விப் பணிப்பாளர்
கிளிநொச்சி.

## அகதிகளுக்கு நிதி சேகரிப்பு

(மிருசுவில்)

யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் தயாரிக்கப்பட்ட 'மண் சுமந்த மேனியர்', 'எங்கள் மண்ணும் இந்த நாட்களும்' ஆகிய இரண்டு நாடகங்களும் சாவகச்சேரி றிபேர்க் கல்லூரியில் மேடையேற்றப் பட்டன.

தென்மராட்சி மாணவர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நாடக நிகழ்ச்சி மூலம் சேகரிக்கப்படும் பணம் பாதிக்கப்பட்டோர் நல் வாழ்வுக்குப் பயன்படுத்தப் படும்.

திடீர் சோதனையில் கண்டுபிடிப்பு:

# பாண் 150 கிறும் குறைவாக கடைகளில் விற்பனையாகிறது

(அரியாலை)

அரியாலையில்உள்ள விற்பனை நிலையங்கள், சந்தையில் திடீர்ப் பரிசோதனை ஒன்று உள்நாட்டு வியாபாரப் பரிசோதகர் திரு. கே. மதிவதனன் தலைமையில், அரியாலை கிழக்கு-மேற்குப் பாவனையாளர் சங்க உறுப்பினர்களின் அனுசரணையோடு மேற்கொள்ளப்பட்டது.

இப் பரிசோதனையின் போது நிறைகுறைந்த தராசுகள், சீல் வைக்கப்படாத படிகளை உபயோகித்த வியாபாரிகள், ஒழுங்கான தராசுகளையும், சீல் வைத்த படிகளையும் உபயோகிக்குமாறு வற்புறுத்தப்பட்டனர். மெட்றிக் முறைக்கு நிறுத்தல் அளவை மாற்றுமல், தொடர்ந்தும் இருத்தல் அவுன்ஸ் முறையைக் கடைப்பிடிக்கும் வியாபாரிகளும் பரிசோதகர்களால் வற்புறுத்தப்பட்டனர். நுகர்வோர் பார்க்கத்தக்கதாக விற்பனை நிலையங்களில் விலைப்பட்டியல்கள் போடவேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.

பல விற்பனையாளர்கள் 450 கிறும் இருக்க வேண்டிய பாணை 300கிறுமாக விற்பனை செய்து வந்தமை கண்டு பிடிக்கப்பட்டது. நிறைகுறைந்த பாணைத்தொடர்ந்தும்விற்பனை செய்பவர்கள், பாண் தயாரிப்பாளர்கள் சட்டபூர்வ நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள் என எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

பாவனையாளர்களின்நன்மை கருதி மீண்டும் ஒரு திடீர்ப் பரிசோதனை மேற்கொள்ளப் படுமெனத் தெரியவருகிறது.

## சுவரொட்டிகள்

(சுண்டுக்குளி)

கசிப்பு உற்பத்தி, சட்டவிரோதக் கள் விற்பனைக்கு எதிரான பெரிய அளவிலான சுவரொட்டிகள் சீவல் ,தொழிலாளர் நலன்புரி ஒன்றியத்தினால் வெளியிடப்பட்டுள்ளன.

இச் சுவரொட்டிகளைக் கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம் பகுதிகளில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலையிலிருந்து பரவலாகக்காண முடிந்தது. கசிப்பு உற்பத்தி செய்பவர்களுக்கும், சட்டவிரோதகள் விற்பனையாளர்களுக்கும் இச்சுவரொட்டிகளில் கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

"கசிப்பை வடிக்காதே, கசிப்பைக் குடிக்காதே உன் ஆயுளைக் குறைக்காதே, கசிப்பு வடிப்பவனால் கிராமம் கெட்டது. கசிப்புக் குடிப்பவனால் குடும்பம் கெட்டது. கட்டுறவுத் தவறணை முறைக்கு வேட்டு வைக்காதே" போன்ற வாசகங்களும் அச்சுவரொட்டிகளில் காணப்பட்டன.

சுங்க/விற்பனை/02/1985

## இலங்கை சுங்கத் திணைக்களம்

யாழ்ப்பாணம்

## கேள்விப் பத்திர விண்ணப்பங்கள்

கீழே விபரிக்கப்பட்டுள்ள பொருட்கள் முத்திரையிடப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் மூலம் விற்பனைக்கு விடப்படும்.

பொருட்கள் பற்றிய விபரங்கள்

1. இந்திய பருத்தி 'யானை மார்க்' வொயில் சேலைகள்
2. கிறிம்ஸ்லொன் ( Grimslon ) கலப்பு இந்தியச் சேலைகள் (விஸ்கோஸ் 66 வீதம், பருத்தி 34 வீதம்)
3. காற்சட்டைத் துணிகள் (கொரிய நாட்டு உற்பத்தி)
4. YKK மார்க் சாய்வுக் கொழுவிகள்(Zip Fastners) 8"
5. நாடாப் பதிவுக் காட்சிக் கருவிகள் (V. C. RR. - NV 250 EN)

இவற்றுக்குரிய கேள்வி விண்ணப்பப் படிவங்கள் மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணமாக ரூபா ஐம்பது (ரூபா 50/–) செலுத்தி யாழ். சுங்க அலுவலகத்தில் முற்பகல் 10-00 மணியிலிருந்து பிற்பகல் 1:00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவங்கள் 1985 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 18 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி பிற்பகல் 1-00 மணி மட்டுமே வழங்கப்படும். பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 1985 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு முன்னதாக மூடப்பட்ட அரக்கு முத்திரை இடப்பட்ட உறைகளில் எனது அலுவலகத்தில் நேர்முகமாகவோ அல்லது பதிவுத் தபால்மூலமாகவோ சேர்ப்பித்தல் வேண்டும். தாமதித்துக் கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்வி விண்ணப்பப் படிவங்கள் 1985 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு யாழ். சுங்க அலுவலகத்தில் திறக்கப்படும். இவ் வேளையில் விண்ணப்பதாரிகள் அல்லது அவர்களது அனுமதி பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் யாழ். சுங்க அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும். (தொலைபேசி இலக்கங்கள்: 22103, 22173)

ஏற்கப்பட்ட விண்ணப்பதாரி விற்கப்படும் பொருட்களுக்குரிய பெறுமதியான முழுத்தொகையையும் வங்கி டிறுப்ற் (Bank Draft) மூலம் விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டு இரண்டு நாட்களுக்குள் யாழ். சுங்க அலுவலகத்தில் கட்டவேண்டும்.

மேற்கூறப்பட்ட நியந்தனைக்கமைய கேள்விக்குரிய பொருட்களின் முழுத் தொகையையும் ஏற்கப்பட்ட விண்ணப்பதாரி செலுத்தத் தவறின் அவரது கோரல் நிராகரிக்கப்படும்.

செ. கணேஷ்
சுங்க மேலதிக இறங்குதுறை அளவையாளர்
யாழ் மாவட்டம்
யாழ் மாவட்ட சுங்க சேகரிப்பாளருக்காக.

சுங்க அலுவலகம்,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம். 15-7-85

உதய சிந்தனை

வெறும் வயிற்றுடன் எவருமே தேசபக்தனாக முடியாது.

--வில்லியம் கூப்பர்

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

# இதய ஒலி

18-7-1985 வியாழக்கிழமை (குரோதன ஆடி 3)

## ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

இந்திய காங்கிரஸ் கட்சியின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதற்காக சென்னை வந்த பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி, இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமாக தெரிவித்த முக்கியமானதொரு கருத்து, தமிழர்கள் நீண்டகாலமாக எதிர்பார்த்திருந்த கேள்வியொன்றுக்குக் கிடைத்த பதிலாக அமைந்துள்ளது.

அதேவேளை, நேற்று முன்தினம் சென்னை திரும்பிய தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் அமிர்தலிங்கமும் அதே விஷயத்தை அடியொற்றித் திட்டவட்டமான சில கருத்துக்களை வலியுறுத்தியுள்ளார்.

ஈழத் தமிழர்களுக்கு சுயாட்சி அமைப்பொன்றை ஏற்படுத்துவதென்பதே குறிப்பிடப்பட்ட விடயமாகும்.

இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் நிலையில் எந்த மாற்றமும் இடையாதென்று தெரிவித்த ராஜீவ் காந்தி, இந்திய அரசியலமைப்பில் இல்லாததொன்றை இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கமுடியாதென்றும் சுட்டிக்காட்டியிருந்தார்.

நிருபர் ஒருவரின் மற்றொரு கேள்விக்கு அவர் பதிலளிக்கையில், ஆகக் கூடியதாக மாநில ஆட்சிமுறையையே வழங்க முடியுமென்றும் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் பாரதத்துக்கு விஜயம் செய்த இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தன தமிழர்களுக்குச் சுயாட்சி வழங்க தம்மிடம் ஒப்புக் கொண்டதாகவும், அது ஆகக்கூடியதாக இந்திய மாநில ஆட்சி அமைப்பானதாகவே இருக்குமென்றும் முதற் தடவையாக ராஜீவ் காந்தி பகிரங்கப்படுத்தியுள்ளார்.

சர்வகட்சி மாநாட்டில் வடக்கும், கிழக்கும் இணைந்த மாநில சுயாட்சி முறையே தமிழர் பிரச்சினையைத் தீர்க்கும் என்று தெரிவித்த மகஜரைச் சமர்ப்பித்தவர் அமைச்சர் தொண்டமான்.

தமிழீழத்துக்கான மாற்றுத் திட்டமாக இதனை அங்கீகரிக்கும் வகையில் மாநாட்டில் கலந்து கொண்ட கூட்டணிப் பிரமுகர்களும் நடந்து கொண்டமை இங்கு குறிப்பிடப்பட வேண்டியது.

அதே மாநில சுயாட்சி அமைப்பு இந்தியாவின் நல்லெண்ணம், நட்புறவு, புரிந்துணர்வு ஆகியவைகளின் காரணத்தால் இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப்படுமானால், அதனை அனைவரும் இப்போதைக்கு ஏற்றுக்கொள்வர் என்பது திண்ணம்.

இலங்கை ஜனாதிபதி தெரிவித்த சுயாட்சி திட்டவட்டமான பிரேரணையாக உருவாக வேண்டும் என்று திரு. அமிர்தலிங்கம் தெரிவித்திருப்பது, கடந்தகால ஏமாற்றங்களின் வெளிப்பாடாகும்.

தமிழர்கள், எந்தவொரு சலுகையையும் அரசாங்கத்திடம் எதிர்பார்க்கவில்லை.

வெறும் எலும்புத்துண்டுக்காக தமிழ் இளைஞர்கள் உயிர்ப் போராட்டம் நடத்தவில்லை:

இனத்தின் நிரந்தர விடுதலைக்கான போராட்டத்தில் விடுமுறைக்கு இடமில்லை என்ற சமீபகால கோஷங்கள், தமிழ் மக்கள் எங்கே நிற்கின்றார்கள், எதனை விரும்புகின்றார்கள் என்பதை உலகு முழுவதற்கும் நன்கு பறைசாற்றி விட்டது.

வாக்குறுதிகளும், பேச்சுவார்த்தைகளும், ஒப்பந்தங்களும் கணக்கில் சேர்க்கப்பட முடியாதவை.

எனவேதான், பாரதப் பிரதமருக்கு இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தன தெரிவித்த சுயாட்சி அமைப்பைச் சலுகையாக இல்லாமல், உரிமையாகப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று தமிழர் பிரதிநிதிகள் விரும்புகின்றனர்.

அரசியலமைப்பில் சேர்த்துக் கொள்ளப்படும் அனைவரும், ஏற்றுக் கொள்ளும் ஒரு தீர்வாக சுயாட்சித் திட்டம் உருவாக வேண்டும்.

இம்பு மகாநாட்டில் கூட்டணியும், ஐந்து தமிழ் இளைஞர் அமைப்புக்களும் ஒன்றாக இணைந்து, தமது கருத்து வேறுபாடுகளைக் களைந்து நடந்து கொண்ட விதம், அரசாங்கத்தின் கண்களைத் திறக்கச் செய்திருக்கும்.

இதே ஒற்றுமை தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படுமானால், வடக்கும் கிழக்கும் இணைந்த மாநில சுயாட்சி கிடைக்கும் என்பது நிச்சயம்.

ஆறு அமைப்புக்களினதும் ஒற்றுமை நல்ல சகுனமாகவே மக்கள் கண்களுக்குத் தென்படுகின்றது.

**தமிழ் அரசொன்றை நிறுவுவதற்காக யுத்தம் புரிந்துவரும் போராளிகளது பலம் வாய்ந்த அரண் யாழ்ப்பாணம் என்று வர்ணிக்கிறார் ராய்ட்டர் நிருபர் பைசால் சமத். இக்கட்டுரை இம் மாதம் 15ம் திகதி 'ஐலன்ட்' பத்திரிகையின் முதற் பக்கத்தில் வெளியானது**

# ராய்ட்டர் நிருபர் ஒருவரின் யாழ்ப்பாண அனுபவம் ...

யாழ்ப்பாணத்து எல்லைக்குச் சற்றுவெளிப்புறமாக கெரில்லாக்கள் தமது பயிற்சி முகாம் ஒன்றில், போர் புரியும் பாவனையில் தமக்குள் பயில்வதை நான் பார்த்துக் கொண்டிருந்தேன். இலங்கையில், பிறிதான ஒரு தமிழ் அரசுக்காக யுத்தம் புரிந்து வரும் போராளிகளினது பலம்வாய்ந்த அரண் யாழ்ப்பாணமாகும்.

போராளிகளாகச் சேர்த்துக் கொள்ளப் பெறுவோரில் பெரும்பாலானோருக்கு, பத்து முதல் பதினாலு வாரங்களாக, இலங்கை இராணுவத்தினராகிய பகைவரை எதிர்த்து நின்று சமர்புரிதற்கென, பயிற்சியளிக்கப்படும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் (ஈ. பீ ஆர் எல். எஃவ். ஐ) சேர்ந்த புரட்சி பிரமுகர், பிரபா, கூறினார்.

ஒரு பிரிட்டிஷ் சப்-மஷின் துப்பாக்கியைத் தோளிலிருந்து தொங்கவிட்டபடி நின்ற பிரபா "பெரும்பான்மையினரான, சிங்களவர்களுக்கு எதிரானதல்ல, எமது சண்டை. இலங்கை அரசாங்கத்திற்கு எதிரானதே எமது போர்," எனத் தங்களுடைய நிலைப்பாட்டை விளக்கினார்.

இலங்கைத் தீவில், பெரும்பான்மைச் சிங்களவர்களுக்கும் சிறுபான்மையினராகிய தமிழர்களுக்குமிடையில் நேரும் வன்செயல்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் நோக்கத்துடன், பூட்டான் நாட்டில் நடந்த சமாதான உரையாடல்களில் கலந்து கொள்ளும் ஐந்து பெரும் கெரில்லா இயக்கங்களில் ஒன்று, ஈ. பி. ஆர். எல். எஃவ். ஆகும்.

பூட்டான் சமாதானப்பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்ளுமாறு தமது இயக்கம் நிர்ப்பந்திக்கப்பட்டது, என்ற பிரபா, நியாயமான, நிலைத்து நிற்கவல்ல தீர்வுகளுக்குத் தாம் இணங்க விரும்புவர் எனத் தொடர்ந்தார்

கெரில்லாக்களை முதன் முதலாகச் சந்திப்பதன் பொருட்டு, சங்கேதப்படி, அதாவது ஏற்கெனவே இணங்கப்பெற்ற இடத்திலும், வேளையிலும், விதத்திலும், புழுதி மயமான ஒரு யாழ்ப்பாணத் தெருவில் ஓரிடத்தில் நான் காத்து நின்றேன்.

"சப் - மஷின் கன்" எனப்படும் சிறுரக - இயந்திரத் துப்பாக்கி ஏந்திய நான்கு ஆட்கள் மோட்டார் காரொன்றில் எனதருகே வந்து நிற்கவும், அக்காரினுள் நான் ஏறி உள்ளே அமர்ந்து கொண்டேன்.

நாங்கள் காரில் சென்று கொண்டிருக்க, அவர்கள் தங்களது இயக்கத்தைப்பற்றித் தாராளமாக அளவளாவுதலில் ஈடுபட்டிருந்தனராயினும், பந்தோபஸ்துப் படை ஆட்களைத் தேடும் கண்களுடன் அவர்கள் சதா விழிப்பாகவே இருந்தனர்.

முகாமுக்குப் போகும் வழியில் இரு முறை எனது கண்கள், பார்க்க இயலாதவாறு கட்டப்பட்டன; ஆங்காங்கே, வழிநெடுகிலும் நின்ற காவலாட்களைக் கடந்து, இருள் சூழும் தருணம், நாங்கள் அங்கு புகுந்தோம்.

புதர்கள் மலிந்த தென்னந் தோப்பு ஒன்றின் மத்தியில், "கன்வஸ்" கூடாரங்களினுள் ஆண்களும் பெண்களுமாக எழுபத்தைந்து பேரளவில் இருந்தனர்; அங்கு எரிந்து கொண்டிருந்த ஒரேயொரு மண்ணெண்ணெய் விளக்கும் இல்லாதிருந்தால் அவ்விடம் ஓரே "கும்" மிருட்டாகக் காட்சியளித்திருக்கும்.

பாதுகாப்பினை முன்னிட்டு, இயக்கப் பயிற்சி முகாம்கள், தலைமைத் தள முகாம், முதலாயின அடிக்கடி இடம்பெயர்வதுண்டு எனப் பிரபா எடுத்துரைத்தார்.

மக்கள் எமது போராட்டத்திற்கு ஆதரவாக நிற்கின்றனர். அவர்கள் மத்தியில் நாம் வாழ்கிறோம். ஆகையால், அகப்பட்டுவிடும் அச்சம் எமக்கில்லை. தினமும் எமக்கு அவர்கள் ஊணும் பானமும் கொண்டுவந்து தருகின்றனர், என விளக்கினார், பிரபா.

வன்செயல்களுக்குப் பொறுப்பானவர்களாக ஈ பி. ஆர். எல். எஃவ். இயக்கத்தினர் கருதப்பட்டுள்ளனர். வட மாகாணப் பொலிசு நிலையங்கள், ஒரு கடற்படைத் தளம் என்பவற்றின்மீதான தாக்குதல்கள் அவற்றுள் அடங்கும்.

இயக்கத் தலைமை நிலையம் இலங்கையின் வட மாகாணத்தில் இருக்கிறது. ஆயினும், தென்னிந்தியாவிலுள்ள சென்னையிலிருந்தே இதன் தலைவர்கள் இயங்குகின்றனர், எனப் பிரபா வெளியிட்டார்.

வேவுபார்த்துத் தகவல் ஈட்டுவதில் ஈ. பி. ஆர். எல். எஃவ் இயக்கத்தினர் சமர்த்தர்கள் எனக் கூறிய பிரபா, நான் யாழ்ப்பாணத்தில் வந்திறங்கிய சில மணி நேரத்தினுள், ராய்ட்டர் நிருபர் ஒருவர் இப்பட்டினத்தில் உள்ளமை அவர்களுக்குத் தெரிந்துபோயிற்று எனத் தொடர்ந்து விபரம் தெரிவித்தார்.

பூட்டான் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதற்கு அனுசரணையாக, பிரகடனமாகியுள்ள போர்நிறுத்தத்தினை அவர்கள் கனம்பண்ணி நடப்பதாக அப்புரட்சிப் பிரமுகர் சொன்னார்.

(இப்பாகம் தணிக்கையாளமையால் பிரசுரமாகவில்லை.)

ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற அரசியற் கட்சிக்கு இடமில்லை என ஈ. பி. ஆர். எல். எஃவ். உணர்வதாக பிரபா கருத்து வெளியிட்டார்.

'ஓர் ஆயுதப் போராட்டத்தின் வாயிலாகத்தான் எமது தமிழ் மக்கள் விடுதலைபெற்றுக் கொள்ள நாம் வழிவகுக்க முடியும். இவ்வளவு இரத்தக் களரி ஏற்படுவதையிட்டு நாம் துயரப்படுகின்றோம் ஆனால் அதைவிட வேறு வழி இல்லாதிருக்கிறதே" என பிரபா அபிப்பிராயம் தெரிவித்தார்.

பெரும்பாலும் பொருளாதார இலக்குகளையே புரட்சியாளர்கள் தாக்குவதுண்டு என "ஈரோஸ்" ஈழ புரட்சிகர அமைப்பு எனும் இன்னுமொரு போராட்ட இயக்கத்தின் பிரமுகர் ஒருவர் ராய்ட்டரிடம் - இடம் தெரிவித்தார்.

"ஒரு சோஷலிச, அதாவது சமதர்ம, அரசு எமக்கு வேண்டும்," என அங்கிருந்த பிரமுகர் பிரகாஷ் கருத்து வெளியிட்டார். பூட்டான் பேச்சுவார்த்தைகளில் தமக்கு நம்பிக்கை கிடையாது என வெளிப்படையாகக் கூறிய அவர், அரசியல் அந்தஸ்தை ஈட்டு முகமாகவே தாம் அங்கு பங்குபற்றுதற்குப் போவதாகக் கூறினார்.

கடந்த வியாழக்கிழமை இலங்கை ஜனாதிபதி ஜூனியஸ் ஜெயவர்த்தனவிற்கு உயிராபத்து ஏற்படுத்த எத்தனித்தமைக்கு "ஈரோஸ்" இயக்கம் பொறுப்பாக இருந்ததாக அரசு கருதுவதையிட்டு, பிரகாஷ் உரையாட மறுத்துவிட்டார்.

நாம் தங்குதடையின்றிப் பட்டினத்தில் நடமாடக் கூடியதாக இருக்கிறது. ஆனால், நாம் படைக்கலங்கள் ஏந்திய வண்ணம் அப்படிச் செய்வதில்லை எனக் கூறி முடித்தார் பிரகாஷ்.

### பாபா கூறியது:

## "எனது அவதார நோக்கம்"

"பகவானிடம் மனிதனை அழைத்துப்போகும் புராதன நெடுஞ்சாலையைச் செப்பனிடவே நான் வந்திருக்கிறேன். நீங்களும் திறமைவாய்ந்த, சிரத்தைவாய்ந்த என்சினியர்களாக, ஓவர்சியர்களாக, தொழிலாளிகளாக ஆகி என்னோடு சேர்ந்து பணிசெய்யுங்கள். வேத, உபநிஷத சாஸ்திரங்களே நான் கூறும் சாலை. அவற்றுக்குப் புத்துயிர் ஊட்டி, அவற்றின் பொருளை விளக்கிப் பரப்பவே நான் வந்திருக்கின்றேன்." இன்னொன்று "ஒரு தேள் என்னைக் கொட்டியபின் நான் ஸாயி பாபா ஆனேன் என்று சிலர் சொல்லக் கேட்டிருப்பீர்கள். நல்லது, சவால் விடுகிறேன்: உங்களில் யாராவது தேளால் கொட்டப்பட்டு ஸாயிபாபா ஆகுங்களேன்! உண்மையில் தேளும் இல்லை; தேள் கொட்டும் இல்லை. நான் மகான்களும், முனிவர்களும், சாதகர்களும் பிரார்த்தித்ததற்குப் பலனாகவே தர்ம ஸம்ஸ்தாபனத்துக்காக வந்தவன். மதத்திலும், கடவுளிடமும் நம்பிக்கை விதை ஊன்றவே பிறந்தேன்.

ஜனாதிபதி றீகன் - சோவியத் கம்யூ. தலைவர் கொர்பசெவ்

# ஜெனீவாவில் உச்சி மாநாடு:

# துரிதகதியில் முன்னேற்பாடு!

(வாஷிங்டன்)

ஜெனீவாவில் அமெரிக்க ஜனாதிபதி திரு. றொனால்ட் றீகனுக்கும், சோவியத் கம்யூனிஸ்ட் தலைவரும், முன்னாள் சோவியத் ஜனாதிபதியுமான திரு. கொர்பசெவ்வுக்கும் இடையே உச்சி மாநாடு ஒன்று நடைபெறுவது பற்றிய தகவல் நேற்று வாஷிங்டனில் வெளியிடப்பட்டது. இம்மாநாட்டுக்கான ஏற்பாடுகளைக் கவனிக்குமாறு ஜனாதிபதி திரு. றீகன் அதிகாரிகளைப் பணித்துள்ளதாகவும் அத்தகவல் கூறுகிறது; இதன் பொருட்டு பத்து நிர்வாக அதிகாரிகள் இன்று ஜெனீவா செல்கின்றனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் இந்த உச்சி மாநாடு அடுத்த மாதம் பத்தொன்பதாம், இருபதாம் திகதிகளில் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறு இருக்க, மேற்படி உச்சி மாநாடானது அமெரிக்க, சோவியத் உறவில் ஓர் மைல் கல்லைத் தோற்றுவிக்கும் வகையில் அமையுமென அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது.

இதற்கு முன்னதாக இரு நாடுகளினதும் அதிகாரிகள் மட்டப் பேச்சு வார்த்தைகள் ஜெனீவாவில் நடைபெற்று வந்துள்ளன.

இதற்கிடையில் திரு. றீகனுக்கு நிகழ்ந்த சத்திர சிகிச்சை குறித்து சோவியத் கம்யூனிஸ்ட் தலைவர் திரு. கொர்பசெவ் அனுதாபச் செய்தி ஒன்றினை அவருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

## ஆபிரிக்கப் பிரதிநிதிகள் எதியோப்பியாவில் மாநாடு

(அடிஸ்அபாவா)

ஆபிரிக்க ஸ்தாபனங்களை உள்ளடக்கியப் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் மாநாடு ஒன்று எதியோப்பியத் தலைநகரான அடிஸ் அபாவாவில் நடைபெறுகிறது.

பிரஸ்தாப சம்மேளனத்தின் இருபத்து ஓராவது மாநாடு இதுவாகும்.

இம் மாநாட்டில் கலந்து கொள்ளும் பொருட்டு அடிஸ் அபாவாவிற்கு முதன் முதலாக வந்து சேர்ந்த பிரதிநிதி தான்ஸானிய ஜனாதிபதி திரு. நியரேரே என்று நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

ஆபிரிக்க மக்களை எதிர் நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து இம்மாநாட்டில் ஆராயப்படவுள்ளதாகவும் அறிக்கைகள் தெரிவித்தன.

## இராணுவம் வாபஸ்

(குஜராத்)

குஜராத் தலைநகரில் இருந்து இராணுவம் முற்றாக விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது. இங்கு இடம்பெற்ற கலவரங்களையடுத்து மூன்று மாதங்களாக இராணுவம் நிலைகொண்டிருந்தது.

## இந்திய விமானக் கடத்தல் வழக்கு; 22ல் மேல் விசாரணை

(லாகூர்)

பாரத விமானங்களைக் கடத்தியதான குற்றச் சாட்டின் பேரில் சீக்கியத் தீவிரவாதிகள் சிலர் மீது பாகிஸ்தானில் தொடரப்பட்டுள்ள வழக்கின் மேல் விசாரணை இம்மாதம் இருபத்து இரண்டாம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த தவணையின்போது சாட்சிகளின் பெயர்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

இவ்வழக்கின் விசாரணை லாகூரில் நடைபெற்று வருகிறது.

## பாரதத்தின் பனாமா தூதர்

(பனாமா)

பனாமாவுக்கான பாரதத் தூதராக திரு. எஸ். ஜே சிங் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் பாரத வெளிவிவகார அமைச்சில் முன்னர் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ராஜினாமாவை ஏற்க மன்னர் மறுப்பு பெல்ஜியத்தில் டிசம்பரில் தேர்தல்!

(லண்டன்)

மன்னரின் கோரிக்கையை ஏற்று பெல்ஜியப் பிரதம மந்திரி திரு. வில்பிறீட் மாடென்ஸ் தொடர்ந்து அரசாங்கத்தைப் பொறுப்பேற்று நடத்தி வருகிறார் என்று நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

முன்னதாக கூட்டணி அரசாங்கத்தில் பிளவு உண்டானதையடுத்துப் பிரதம மந்திரி தனது அரசாங்கத்தின் ராஜினாமாவை மன்னரிடம் சமர்ப்பித்திருந்தார்.

பிறேஸிலில் நிகழ்ந்த விளையாட்டுப் போட்டி ஒன்றில் முப்பத்து எட்டுப்பேர் பலியானதற்கு யார் பொறுப்பு என்ற பிரச்சினையே இப்பிளவுக்கான காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

ராஜினாமாவை மன்னர் ஏற்றுக்கொள்ள மறுத்து அரசாங்கத்தைத் தொடர்ந்து நடத்துமாறு பிரதம மந்திரியைக் கேட்டுக்கொண்டார்.

இதற்கிணங்கிய அவர் தேர்தல் எதிர்வரும் டிசம்பரில் நடைபெறும் என்று அறிவித்தார்.

## உலக அழகுராணி ★ 19 வயது மாணவி ★

(லண்டன்)

உலக அழகு ராணியாக வெனிசுவேலாவைச் சேர்ந்த பத்தொன்பது வயது மாணவியான சத்திஜா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். தன்னுடன் போட்டியிட்ட எழுபத்து எட்டு தேச யுவதிகளை வெற்றி கொண்டு இவர் உலக அழகு ராணிக் கிரீடத்தைத் தனதாக்கிக் கொண்டார். ஸ்பெயினைச் சேர்ந்த இருபது வயது யுவதியும் பிரான்ஸைச் சேர்ந்த பதினெட்டு வயது யுவதியும் முறையே இரண்டாம், மூன்றும் இடங்களையும் பெற்றுக் கொண்டனர்.

## நவசக்தி அர்ச்சனை

(கல்வியங்காடு)

கல்வியங்காடு இலங்கைநாயகி அம்மன் கோவிலில் இன்று வியாழக்கிழமை மாலை அம்பாளுக்கு விசேஷ நவசக்தி அர்ச்சனை நடைபெறும்.

உங்கள் முதலீட்டு வளர்ச்சியில் அக்கறை கொண்டு அபிமானம் பெற்ற தமிழர் நிதியம் நிதி நிறுவனத்தினர் வழங்கும்

மேலும் ஒரு சலுகை!

இதுவரை மாதாந்த வட்டி பெறுவோருக்கு வழங்கி வந்த 25% வீதவட்டி

30% வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது

தமிழர் நிதியம் நிதி நிறுவனத்தினரின்

தனித்துவமான 36% வட்டி முதிர்வுநிலை வைப்புகளுக்கு வழமைபோல் நீங்கள் பெறலாம்

36% அதீத வட்டி வழங்கும் நிதி நிறுவனம்

தமிழர் நிதியம்

140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். ☎ 22437

ஈழமுரசு

## மாட்டு வண்டில், சைக்கிள்களுக்கு லைசன்ஸ் வழங்கும் அதிகாரமா?

தமிழ்ப் பகுதிகளுக்கு அரசாங்கம் வழங்கும் அதிகாரப் பரவலாக்கல் மாட்டுவண்டில்களுக்கும், துவிச்சக்கர வண்டிகளுக்கும் லைசன்ஸ் வழங்குவது போன்றவையாக இருந்தால் அதனை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று திம்பு பேச்சுவார்த்தையின் இறுதிநாளன்று கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் நறுக்காகத் தெரிவித்ததாக 'இந்து' பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. "இனப்பிரச்சினைக்குத் தீர்க்கமான அரசியல் முடிவைக் காண வேண்டுமானால், எமது தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய புதிய யோசனைகளுடன் ஆகஸ்ட் சந்திப்பின் போது வாருங்கள்" என்று திரு எச். டபிள்யூ. ஜெயவர்த்தனாவிடம் திரு அமிர்தலிங்கம் வேண்டுகோள் விடுத்ததாகவும் இச் செய்தி தெரிவித்துள்ளது.

ஆயுதம் தாங்கிய குடியேற்றக்காரர்

# வன்னிப்பகுதி கிராமவாசிகள் மீது தாக்குதல்!

## உடைமைகளும் கொள்ளை!

(நெடுங்கேணி)

ஆயுதம் தாங்கிய குடியேற்றவாசிகள் ஒதியமலை, பெரியகுளம், பட்டி குடியிருப்பு போன்ற இடங்களிலுள்ள வீடுகள், கடைகள் ஆகியவற்றில் தாக்குதல்களை மேற்கொண்டு கொள்ளைகளிலும் ஈடுபட்டு வருவதனால் அப்பகுதிகளில் பதற்றமும், பீதியும் நிலவி வருகின்றது. இக்குடியேற்றவாசிகள் கிராமங்களில் பொது மக்களை அடித்துத் துன்புறுத்தி வருவதாகவும் கிராமவாசிகளின் விலை பொருட்களான செத்தல் மிளகாய் போன்றவற்றை கொள்ளையடித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடைகள் போன்றவற்றை இவர்கள் உடைத்துக் கொள்ளையடிக்கும் போது வேறு சிலர் இவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதாகவும் கூறப்படுகின்றது.

கென்ற் பாம், டொலர்பாம் ஆகியவற்றிலேயே இக்குடியேற்றவாசிகள் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

### தச்சுவேலை மனையியலாக மாறியது!

(நல்லூர்)

ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் தச்சு வேலையை பாடநெறியாகக்கொண்டு ஆசிரிய பயிற்சி பெறுவதற்கு விண்ணப்பித்த ஆண் ஆசிரியரொருவருக்கு "மனையியல்" பாடநெறிக்கு நேர்முகப் பரீட்சைக்கு கொழும்பு ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக் கிளைக்கு இம்மாதம் 19ம் திகதி வரும்படி கடிதம் வந்துள்ளது. இக்கடிதம் கிடைத்த ஆசிரியர் என்ன செய்வதென்று தெரியாது பெரும் சங்கடமான நிலைமைக்குள்ளாகியுள்ளார்.

### மன்னாரில்....

—1-ஆம் பக்கத் தொடர்

"பூட்டான் மகாநாடு தீர்க்காது எம் குறையை' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரம் ஒன்றின் மூலமே நேற்றைய ஹர்த்தாலுக்கு அழைப்பு விடப்பட்டிருந்தது. இப்பிரசுரம் தமிழ் மக்களால் வெளியிடப்பட்டது.

காலாகாலமாக இனவெறி அரசுகளுடன் எமது தமிழ்த் தலைவர்கள் நடாத்திய பண்டா செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம், சர்வகட்சி மகாநாடு, வட்டமேசை மகாநாடு போன்றவற்றின் பலாபலன் என்ன? என்று இப்பிரசுரத்தில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

### வெங்காயத்துடன்....

—1-ஆம் பக்கத் தொடர்

ஜெலிக்னைட் கொழும்புக்குக் கொண்டுசெல்லப்பட்டதாக பொலிஸார்தெரிவித்துள்ளனர்

தலைமறைவாகியிருக்கும் தந்தித் தொடர்பு பரிசோதகரான ரஞ்சனும், அவரது இளம் மனைவியும் கொழும்பு நகரை விட்டு வெளியேறியிருக்கலாமென்ற தகவலொன்றைத் தொடர்ந்து வெளியூர்களிலும் தேடுதல் வேட்டை ஆரம்பமாகியுள்ளது.

இச் சம்பவம் சம்பந்தமாக இதுவரை 35 பேர் கைதாகியுள்ளனர். இதில் நான்குபேர் தமிழ்ப் பெண்களாவர்

### 1980 வேலை....

—1-ஆம் பக்கத் தொடர்

இடைப்பட்ட நேரத்தில் இம் மறியல் போராட்டத்தை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

மூந்நூறு ரூபா சம்பள உயர்வு கோரி 1980 ஜூலை மாதம் 19ம் திகதி மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தத்தின் விளைவாக சுமார் இரண்டாயிரம் பேர் வேலை இழக்க நேர்ந்தது. இவர்களில் மீண்டும் வேலை வழங்கப்பட்டவர்களுக்கும் சம்பளப் பாக்கி வழங்கப்படவில்லை.

நாளைய மறியலின் போது வேலை இழந்தவர்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்பு வழங்கப்படவேண்டும், சம்பளப் பாக்கி கொடுக்கப்பட வேண்டும் ஆகியன உட்பட பலகோரிக்கைகள் முன்வைக்கப்படவுள்ளன.

### கொக்குவிலில் ஆடிப்பூர உற்சவம்

கொக்குவில் கிழக்கு. கோணவளை ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலய ஆடிப்பூரத் திருவிழா 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. காலை 9 00 மணிக்கு பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் தலைமையில் அம்பாளுக்கு அபிஷேகமும், பூஜையும் பிற்பகல் 4.30 மணிக்கு விசேட பூசையுடன் ஆரம்பமாகி அம்பாள் வீதிவலம் வருதலும் இடம்பெறும்.

விசேஷ நிகழ்ச்சிகளாக காலை 11 00 மணிக்கு துர்க்கா துரந்தரி சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் அருளுரையும், மாலை 6 30 மணிக்கு கம்பன் கழக அமைப்பாளர் செல்வன் இ. ஜெயராஜ்ஜின் 'தெய்வ நீதி' சொற்பொழிவும், மாலை 6.30 க்கு சின்னமணி குழுவினரின் வில்லிசை நிகழ்ச்சியும் இடம்பெறும்.

### இலங்கை....

—1-ஆம் பக்கத் தொடர்

என்ற கருத்துப் பற்றிப் பிரஸ்தாபித்த அவர், அப்படியாயின் அத்திட்டம் பிரேரணையாக உருவாக வேண்டும்' என்றார்.

"இலங்கை அரசின் மாவட்ட சபை யோசனையை ஆறு தமிழ்க் குழுக்களுமே நிராகரித்துவிட்டன" என்றும் அவர் சொன்னார்.

"திம்பு மாநாட்டில் தமிழ்க் குழுக்கள் யாவும் ஒற்றுமையுடன் செயற்பட்டதை இலங்கை அரசு உணர வேண்டும்" என்று சொன்ன திரு. அமிர்தலிங்கம், "தமிழ் சமுதாயத்துக்கு இது ஓர் நல்ல சகுனம்" என்றார்.

"பேச்சுவார்த்தைகளில் போராளிகள் குழுவும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்க ஓர் விடயம்" என்று கூறிய அவர் 'திம்புப் பேச்சுவார்த்தைகளுக்குப் பாரதம் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளது" என்றும் சொன்னார்.

"இராணுவத் தீர்வை விட சமாதானத் தீர்வே சிறந்தது. எனவே பேச்சுவார்த்தைகள் தொடர வேண்டும்" என்றும் சொன்னார் அவர்.

"பேச்சுவார்த்தைகளில் உங்களுக்கு நம்பிக்கை உண்டாகியுள்ளதா? என வினவப்பட்டபோது 'நம்பிக்கையும் இல்லை நம்பிக்கையை இழக்கவும் இல்லை' என அவர் பதிலிறுத்தார்.

சென்னையில் கடத்தப்பட்டாராம்!

## வர்த்தகரை விடுவிக்குமாறு நேற்று ஊழியர் பகிஷ்கரிப்பு

சென்னையில் வைத்துக் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் யாழ்ப்பாணம் 'சிற்றி மெடிக்கல்ஸ்' உரிமையாளரை விடுதலை செய்யுமாறு கோரி மேற்படி நிறுவன ஊழியர்கள் நேற்று தமது வர்த்தக நிலையங்களைப் பூட்டி வீதியில் மறியல் போராட்டமொன்றை மேற்கொண்டார்கள்.

சிற்றி மெடிக்கல்ஸ் உரிமையாளரான திரு. எல். வி. சிங்கராயரை விடுதலை செய்யுமாறு கோரும் சுலோகங்கள் மேற்படி நிலையங்களின் முன்னால் கட்டப்பட்டிருந்தன. கடை ஊழியர்கள் வீதியில் நின்று துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தார்கள்.

திரு. சிங்கராயர் சென்ற மாதம் சென்னையில் வைத்துக் கடத்தப்பட்டதாகவும் அவரைப்பற்றிய தகவல் எதுவும் இதுவரை தெரியவில்லை எனவும் கூறப்படுகிறது.

## தேசிய பந்தோபஸ்து நிதி 4 கோடி ரூபாவாகியுள்ளது

(கொழும்பு)

"நாட்டின் எதிர்காலத்தைத் தீவிரவாதிகள் அல்ல, மிதவாதிகளே நிர்ணயிக்கின்றனர்." என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி கொழும்பு றோயல் கல்லூரியில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரை நிகழ்த்துகையில் சொன்னார்.

"இந்நாட்டில் பாதுகாப்புச் செலவைச் சமாளிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட தேசிய பந்தோபஸ்து நிதியத்தில் தற்போது நான்கு கோடி ரூபா சேர்ந்துள்ளது. தீவிரவாதிகளினால் சேதப்படுத்தப்பட்ட உடைமைகளைப் புனரமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து ஆராயப்பட்டு வருகிறது" என்றும் அவர் சொன்னார்.

"தீவிரவாத நடவடிக்கைகள் முற்றாக ஒழிக்கப்பட்டபின் இந்நடவடிக்கையை மேற்கொள்ள முடியும்" என்று அவர் குறிப்பிட்டார்

### புதிய யோசனை....

—1-ஆம் பக்கத் தொடர்

தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றக் கூடியனவாக இந்தப் பிரேரணைகள் இருக்கவில்லை என்றும் தமிழ்ப் பிரதிநிதிகள் கூறியுள்ளனர். மேலும் தற்போதைய அரசியல் சட்ட ஒருமைப்பாட்டினுள் ஒரு தீர்வு காணப்பட முடியாது எனவும் தமிழ்ப் பிரச்சினைக்கான தீர்வு நான்கு அடிப்படைக் கொள்கைகளைக் கொண்டதாக அமைய வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்ததாக ஜெயவர்த்தனா சொன்னார்.

அவை இலங்கைத் தமிழர்களை ஒரு தனித்துவ இனமாக அங்கீகரிக்க வேண்டும்; தமிழரின் வசிப்பிட பிராந்தியங்கள் இனம் காணப்படவேண்டியதுடன் பிரதேச அந்தஸ்துக்கான உத்தரவாதமும் அளிக்கப்பட வேண்டும்; தமிழ்ப் பிராந்தியங்களுக்கான மாறதியமைக்க முடியாத சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படவேண்டும்; இந்த நாட்டை தமது தாயமாக கருதும் சகல தமிழர்களின் அடிப்படை உரிமைகளையும் பிரஜா உரிமைகளையும் அங்கீகரிக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர். தங்கள் மக்களின் அபிலாஷைகளை அரசாங்கத்தின் பிரேரணைகள் பூர்த்தி செய்வதாக இல்லை எனத் தமிழ்ப் பிரதிநிதிகள் மாநாட்டில் தெரிவித்த போதிலும் அவர்கள் தமது இதசபனங்களுடன் ஆலோசனை நடத்துவதாக தெரிவித்ததாகவும் திரு. ஜெயவர்த்தனா கூறினார். அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தமாக தமிழ்ப் பிரதிநிதிகள் தமது மாற்று யோசனைகளை தெரிவிக்க வேண்டும் என்றும் ஆலோசனை நடாத்த வேண்டியவர்கள் அங்கு இல்லாததனால் இப்போது அவர்கள் அதனைச் செய்ய முடியாததால் கூடிய விரைவில் வசதியான நாளில் அந்த யோசனைகளுடன் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளுமாறும் இலங்கை அரசாங்க தூதுக்குழு அவர்களைக் கேட்டுக் கொண்டது


### ஸ்ரீ துர்க்கை அம்பாள் தேவஸ்தானம்

சாவகச்சேரி

அன்புடையீர்!

இவ்வாலயத்தில் தற்பொழுது நடைபெற்றுவரும் 'இலட்சார்ச்சனை' 20-7-85 சனிக்கிழமை மாலை பூஜையுடன் பூர்த்தி அடையும். 21-7-85 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் துர்க்கை அம்பாளுக்கு அஷ்டோத்தரசத (108) சங்காபிஷேகமும், பிற்பகல் 2-30 மணியளவில் விசேட பூஜையும், சுமங்கலி பூஜையும் (தீபலட்சுமி பூஜை) நடைபெறும். சிறப்பு விருந்தினராகத் தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கை அம்மன் தேவஸ்தான பரிபாலன சபைத் தலைவி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் "ஆடிப்பூரமும் அம்பிகை வழிபாடும்" என்பது பற்றி அருளுரை வழங்குவார்கள். அனைவரும் வருகை தந்து அன்னையின் அருள்பெறுக.

இங்ஙனம்

பிரம்மஸ்ரீ ப. மகாகணபதி சர்மா

ஆதீன கர்த்தா.


### மரண அறிவித்தல்

யாழ்ப்பாணம். இல: 5, முதலாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த இளைப்பாறிய ஓவசியர்

பொ. துரைராஜா காலமானார்.

இவர் தாவடி, பூமணியின் கணவரும், கமலாதேவி, நடேசபிள்ளை, ஸ்ரீ ரெங்கநாயகி, வசந்தநாயகி, றபேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவலோகசுந்தரம், சிவநாதன், சந்திராகரன், விக்கினேஸ்வரி ஆகியோரின் மாமனாரும் ஆவார். இறுதிச் சடங்குகள் 18-7-85 இன்று 3-00 மணிக்கு நடைபெறும்.

"ஈழமுரசு" சசிபாபா அடைக்கலம் அசோசியேற் நியூஸ்பேப்பர்ஸ் 87, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 18-7-85 வியாழக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது; தொலைபேசி: 23336